Scale Em Tempo 85 Style Ballad> 6-8 Slow Rock1

7. கல்வாரி சிலுவை காட்சி (எசாயா 53)

கல்வாரி சிலுவைக்காட்சியை காணும்போது
கல்லான இதயமும் உருகும் (2)
அழகும் இல்லை சௌந்தரியமில்லை – நாங்கள்
பார்க்க விரும்பும் ரூபமும் இல்லை (2) (வசனம்:2)
அசட்டை பண்ணப்பட்டவராக மனுஷரால்
புறக்கணிக்கப்பட்டவரானீர் (வசனம் 3)

1

நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும்
வாய் திறவாதிருந்தீர்
அடிக்கப்படும் ஆட்டைப் போலவே - நீரும்
சத்தமிடாதிருந்தீர் இயேசுவே (வசனம்:7)
எங்கள் மீறுதலால் காயப்பட்டீரே - எங்களது
அக்கிரமத்தால் நொறுக்கப்பட்டீரே (வசனம் 5) – கல்வாரி

2

எங்கள் பாடுகளை துக்கங்களை
உந்தன் மீது சுமத்திடவே (வசனம் 4)
கர்த்தரோ சித்தம் கொண்டாரே (வசனம்:10) – உம்மேல்
எங்கள் அக்கிரமங்களை விழவும் செய்தாரே (வசனம் 6)
நீர் கொடுமை ஒன்றும் செய்ததுமில்லை
உந்தன் வாயில் வஞ்சனையும் இருந்ததுமில்லை (வசனம் 9) -
கல்வாரி

3

எங்கள் நோய்களையும் சாபங்ளை
ஏற்றுக்கொண்டீர் சிலுவைதனில்
சமாதானம் ஈந்திடவே நீர் - உலகில்
ஆக்கினையை ஏற்றுக் கொண்டீரே
உம் தழும்புகளால் குணமாகிறோம்
எங்களை மீட்டுக் கொண்டீர் சாபம் நீக்கியே (வசனம் 5) -கல்வாரி

4

குற்ற நிவார்ண பலியாக
ஒப்புக்கொடுத்து எங்களை (வசனம்:10)
நீதிமான்கள் ஆக்கினீரன்றோ (வசனம் 11) – எங்களது
அக்கிரமங்களை சுமந்து கொண்டீரே
உம் ஆத்துமாவை மரணத்திலூற்றி – எங்களது
பாவங்களை சுமந்து தீர்த்தீரே – கல்வாரி

---